டிஜிட்டல் டெய்லி
# அக்ரி-டாக்டர்
agridoctor.in
Agridoctor.in | 26.02.2025 புதன்கிழமை | பக்கங்கள் 27 | RNI No.TNTAM/2012/49602 | Vol.12, Issue : 206 - Madurai | Online Edition

கல்யாண் ஜுவல்லர்ஸ்

# தமிழகத்தில் வருகிற 1ம் தேதி வரை கனமழைக்கு வாய்ப்பு!

தமிழகத்தில் வருகிற 1ம் தேதி வரை கனமழைக்கு வாய்ப்பு உள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்து உள்ளது.

இது தொடர்பாக சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்டுள்ள அறிக்கையில், தெற்கு கேரளா மற்றும் அதனை ஒட்டிய பகுதிகளின் மேல் ஒரு வளிமண்டல கீழடுக்கு சுழற்சி நிலவுகிறது. இதன் காரணமாக, தென்தமிழக கடலோர மாவட்டங்கள், டெல்டா மாவட்டங்களில் ஓரிரு இடங்களிலும்,



காரைக்கால் பகுதிகளிலும் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். இதர தமிழக மாவட்டங்கள் மற்றும் புதுவையில் பொதுவாக வறண்ட வானிலை நிலவக்கூடும். காலை வேளையில் பொதுவாக லேசான பனிமூட்டம் காணப்படும்.

நாளை 27ம் தேதி கடலோர தமிழகத்தில் ஒரு சில இடங்களிலும், உள்தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் இடி, மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை, புதுக்கோட்டை, ராமநாதபுரம், தூத்துக்குடி, திருநெல்வேலி, கன்னியாகுமரி மாவட்டங்களில் ஓரிரு இடங்களிலும் மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் கனமழை பெய்ய வாய்ப்புள்ளது.

28ம் தேதியில் கடலோர தமிழகத்தில் அநேக இடங்களிலும், உள்தமிழகத்தில் ஒரு சில இடங்களிலும், புதுவை மற்றும்




காரைக்கால் பகுதிகளிலும் இடி, மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை, புதுக்கோட்டை, ராமநாதபுரம், சிவகங்கை, விருதுநகர், தென்காசி, தூத்துக்குடி, திருநெல்வேலி, கன்னியாகுமரி மாவட்டங்களில் ஓரிரு இடங்களிலும் மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் கனமழை பெய்ய வாய்ப்புள்ளது.

1ம் தேதியில் தமிழகத்தில் அநேக இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் இடி, மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். கன்னியா குமரி, திருநெல்வேலி, தென்காசி, தூத்துக்குடி மற்றும் ராமநாதபுரம் மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

agridoctor.in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Ph. : 4366425.

# கிருஷ்ணா வேளாண்மை மற்றும் தொழில்நுட்பக் கல்லூரியில் பட்டமளிப்பு விழா

மதுரை, பிப்.25

மதுரை மாவட்டம், உசிலம்பட்டியில் அமைந்துள்ள கிருஷ்ணா வேளாண்மை மற்றும் தொழில்நுட்பக் கல்லூரியில் முதலாவது பட்டமளிப்பு விழா கடந்த பிப்ரவரி 24ஆம் தேதி அன்று கல்லூரியின் தலைவர் K.சந்திரசேகர் தலைமையில் நடைபெற்றது. இவ்விழாவில் கல்லூரியின் முதல்வர், முனைவர் V.K.பால்பாண்டி அனைவரையும் வரவேற்று ஆண்டறிக்கை வாசித்தார். சிறப்பு விருந்தினராக முனைவர் E.N.பழனிசாமி, லயன் கல்விக் குழுமத்தின் தலைவர், திண்டுக்கல், கலந்து கொண்டு 163 மாணவ மாணவியர்களுக்கு பட்டங்களை வழங்கி விழா பேருரை நிகழ்த்தினார்.




D.சுகுமாரன், M.Tech. சந்திராயன் IAS அகாடமி தலைவர், திண்டுக்கல் சிறப்பு விருந்தினராக பங்கேற்று 2016, 2017, 2018 மற்றும் 2019 – ஆம் ஆண்டுகளில் அதிக மதிப்பெண் பெற்ற மாணவர் களுக்கும், விளையாட்டுப் போட்டிகளில் சிறந்து விளங்கிய மாணவர்களுக்கும் தங்கப்பதக்கம் மற்றும் சான்றிதழ்களை வழங்கி சிறப்பு உறையும் ஆற்றினார்.

விழாவில் KRISAT–ன் அறங்காவலர்களான K.சீனிவாசன், கவிதா, லதா மற்றும் சுதா ஆகியோர்கள் கலந்து கொண்டனர்.

மேலும், கல்லூரி பேராசிரியர்கள், மாணவர்களின் பெற்றோர்கள், கல்லூரியின் பணியாளர்கள் மற்றும் மாணவ மாணவிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

**மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!**

அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.


இப்பொழுது தென்னிந்தியாவின்
பிரபலமான வாழை இரகங்களின்
கன்றுகள் அதிநவீன திசுவளர்ப்பு
தொழில்நுட்பத்தில் உங்களுக்காக
உருவாக்கி தருகிறது ஜெயின் நிறுவனம்
ஜெயின் ஏலக்கி:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் செவ்வாழை:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் பூவன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 16/-
ஜெயின் மொந்தன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் நேந்திரன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 18/-
முன்பதிவு தொடர்புக்கு :
94425 02396
94422 03387
94425 04480
Jain Tissue-Culture
Jain Irrigation Systems Ltd.
Small Ideas. Big Revolutions.
JAIN HI-TECH PLANT FACTORY
போக்குவரத்து கட்டணம் கூடுதலாக. (உடுமலையிலிருந்து)
ஏமாற்றத்தைத் தவிர்க்க, உங்கள் தேவைகளை இன்றே முன்பதிவு செய்யுங்கள்.
குறிப்பு: ஜெயின் திசு வளர்ப்பு தாவரங்கள் நோய்த் தாக்கம் இல்லாதவை என்ற போதிலும் நிலத்தில் ஊன்றிய பின்பு நோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது.
அதனால் நோய்த் தாக்கம் ஏற்படாது என்பதற்கோ, விளைச்சல் பாதிக்கப்படாது என்பதற்கோ நிறுவனம் உத்தரவாதம் அளிக்காது.

# பிரதம மந்திரியின் கிசான் சம்மான் விழா



மதுரை, பிப்.25

பிரதம மந்திரியின் 19வது தவனையான கிசான் சம்மான் விழாவானது 24-2-25ல் மதுரை வேளாண்மை அறிவியல் நிலையத்தில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சி இணையவழி மூலமாக ஒளிபரப்பபட்டது. இந்நிகழ்ச்சியை முனைவர் இ.சுப்ரமணியன், திட்ட ஒருங்கிணைப்பாளர், ஒருங் கிணைந்து நடத்தினார். இதில் 230 க்கும் மேற்பட்ட விவசாய பெருமக்கள் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள். வேளாண்மை அறிவியல் நிலையம் வழியாக பயிற்சி பெற்ற தொழில் முனைவோர் ஸ்டால்களில் தங்களது பொருட்களை காட்சிப்படுத்தினார்கள். அங்கக வேளாண்மை பயிற்சியும், அந்நிகழ்ச்சியில் நடத்தப்பட்டது மற்றும் புறீளீஹுா தோட்ட பராமரிப்பாளர் பயிற்சிக்கான சான்றிதழ் மற்றும் மதிப்பெண் பட்டியல் பயிற்சியாளர்களுக்கு வழங்கப்பட்டது. ஹிஹுாளீ மதுரை மாவட்ட அலுவலர்கள் ஒளிபரப்பு வேலைகளை மேற்கொண்டனர். இந்நிகழ்ச்சி மதுரை வேளாண்மைக் கல்லூரியில் அமைந்துள்ள வேளாண்மை அறிவியல் நிலையத்தில் வெகு விமரிசையாக நடைபெற்றது.

## நுண்ணீர் பாசன முகவர் சங்கத்தினர் வேளாண் அலுவலர்களை சந்தித்து கோரிக்கைகளை வலியுறுத்தல்



கோயம்புத்தூர், பிப்.25

கோவை மாவட்ட நுண்ணீர் பாசன முகவர்கள் சங்கத்தின் சார்பாக மாவட்ட வேளாண் இணை இயக்குனர், தோடக்கலை துணை இயக்குனர், வேளாண் பொறியியல் துறை அதிகாரிகளை கோவை மாவட்ட நுண்ணீர் பாசன முகவர்கள் சங்கத்தின் தலைவர் ஜோஸ்னா சண்முகசுந்தரம் மற்றும் உறுப்பினர்கள் மரியாதை நிமித்தமாக சந்தித்து பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தினர்.

## கோவை ஆர்.எஸ்.புரம் உழவர் சந்தை விலை விபரம் 25.02.2025

| வ. எண் | காய்கறி விபரம் | குறைந்த பட்சம் | அதிக பட்சம் | வ. எண் | காய்கறி விபரம் | குறைந்த பட்சம் | அதிக பட்சம் |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | கத்திரி(Hybrid) | 20 | 26 | 56 | காளான் (சிப்பிபட்டன்)200GM | 35 | 40 |
| 1A | கத்திரி(Simron) | 20 | 24 | 57 | உருளை (பிற) | 18 | 22 |
| 1B | கத்திரி(Nadu) | 30 | 34 | 57A | உருளை(ஊட்டி) | 25 | 36 |
| 2 | வெண்டை | 40 | 44 | 58 | மேரக்காய் | 15 | 20 |
| 3 | தக்காளி (நாடு) | 12 | 15 | 59 | முள்ளங்கி(சிவப்பு) | 20 | 26 |
| 4 | தக்காளி ஆப்பிள் | 12 | 16 | 60 | கேரட் | 50 | 60 |
| 5 | அவரை(பீஸ்கட்) | 35 | 40 | 61 | பீட்ரூட் (ஊட்டி) | 40 | 50 |
| 6 | புடலை | 25 | 28 | 62 | நூல்கோல் | 20 | 28 |
| 7 | பீர்க்கன் | 30 | 36 | 63 | டர்னிப் | 28 | 32 |
| 8 | சுரைக்காய் | 10 | 14 | 64 | மு.கோஸ் | 15 | 20 |
| 9 | பாகற்காய் | 30 | 40 | 65 | மு.கோஸ்(கலர்) | 25 | 30 |
| 10 | கொத்தவரை | 28 | 32 | 66 | காளிபிளவர் | 24 | 28 |
| 11 | பூசணி | 12 | 16 | 67 | பட்டாணி | 65 | 70 |
| 12 | அரசாணி | 14 | 18 | 68 | பூண்டு | 80 | 110 |
| 13 | ப.மிளகாய்(சம்பா) | 25 | 30 | 69 | இஞ்சி | 40 | 50 |
| 14 | ப.மிளகாய்(Bullet/Nadu) | 25 | 30 | 70 | புருக்கோலின் | 90 | 100 |
| 15 | சி.வெங்காயம் | 35 | 40 | 71 | பென்னி பீன்ஸ் | 40 | 44 |
| 16 | பெ.வெங்காயம் | 34 | 38 | 72 | குடமிளகாய் | 44 | 48 |
| 17 | த.பயறு(வெள்ளை) | 20 | 25 | 73 | ஊட்டி அவரை | 110 | 120 |
| 18 | பச்சை மொச்சை | 40 | 50 | | | | |
| 19 | முருங்கை | 70 | 80 | | | | |
| 20 | தேங்காய் | 60 | 64 | | | | |
| 21 | மாங்காய் | 65 | 75 | | | | |
| 22 | வாழைக்காய் | 35 | 40 | | | | |
| 23 | சேனைகிழங்கு | 40 | 50 | | | | |
| 24 | கருணைகிழங்கு | 55 | 60 | 75 | எலுமிச்சை | 50 | 60 |
| 25 | சேப்பங்கிழங்கு | 55 | 60 | 76 | கொய்யா (வெள்ளை/சிவப்பு) | 40 | 50 |
| 26 | மரவள்ளி | 30 | 34 | 77 | சப்போட்டா | 45 | 50 |
| 27 | சர்க்கரைவள்ளி | 35 | 40 | 78 | பப்பாளி | 35 | 40 |
| 28 | கறிவேப்பிலை | 70 | 75 | 79 | மாதுளை | 120 | 200 |
| 29 | கொத்தமல்லி | 24 | 28 | 80 | திராட்சை | 90 | 100 |
| 30 | புதினா | 5 | 6 | 81 | மாம்பழம் | 120 | 180 |
| 31 | அகத்திக்கீரை | 12 | 15 | 82 | ஆப்பிள் (சிம்லா/காலா) | 140 | 220 |
| 32 | தண்டுக்கீரை | 12 | 15 | 83 | ஆரஞ்சு | 70 | 80 |
| 33 | சுக்கிட்டி&வெந்தயக்கீரை | 18 | 20 | 84 | சாத்துக்குடி | 40 | 50 |
| 34 | அரைக்கீரை | 12 | 15 | 85 | அன்னாசி பழம் | 50 | 55 |
| 35 | சிறுகீரை | 12 | 15 | 86 | சீதாப்பழம் | 45 | 50 |
| 36 | பாலாக்கு | 12 | 15 | 87 | முலாம்பழம் | 30 | 40 |
| 37 | பருப்புக்கீரை | 12 | 15 | 88 | தர்பூசணி | 15 | 20 |
| 38 | முருங்கைக்கீரை | 8 | 10 | 89 | பலாப்பழம் | | |
| 39 | வல்லாரை | 8 | 10 | 90 | கதளி | 70 | 74 |
| 40 | கோவக்காய் | 25 | 30 | 91 | பூவன் | 40 | 44 |
| 41 | வாழைத்தண்டு | 5 | 10 | 92 | ரஸ்தாளி | 50 | 55 |
| 42 | வாழை இலை | 4 | 5 | 93 | கற்பூரவள்ளி | 44 | 48 |
| 43 | வாழைப்பூ | 10 | 15 | 94 | மோரிஸ் | 35 | 40 |
| 44 | முட்டைகோஸ் (உள்ளூர்) | 12 | 18 | 95 | நாடன் | 45 | 50 |
| 45 | வெள்ளரி | 30 | 35 | 96 | நேந்திரன் | 60 | 65 |
| 46 | பீட்ரூட் (உள்ளூர்) | 16 | 20 | 97 | செவ்வாழை | 95 | 100 |
| 47 | சுண்டக்காய் | 140 | 150 | 98 | பேரிக்காய் | 150 | 165 |
| 48 | வெங்காயத்தாள் | 8 | 10 | 99 | நார்த்தங்காய் | 40 | 45 |
| 49 | காளிபிளவர் (உள்ளூர்) | 18 | 24 | 100 | கறிப்பலா | 40 | 45 |
| 50 | நிலக்கடலை | 0 | 0 | 101 | டிராகன் ப்ரூட் | 140 | 150 |
| 51 | மக்காச்சோளக்கதிர் | 25 | 30 | 102 | நெல்லிக்காய் | 70 | 75 |
| 52 | புளி | 130 | 140 | 103 | Seedless திராட்சை(ப/க) | 120 | 160 |
| 53 | ஸ்வீட் கான் | 35 | 38 | | | | |
| 54 | இளநீர்(சிறியது/பெரியது) | 27 | 30 | | | | |
| 55 | முள்ளங்கி(வெள்ளை) | 18 | 22 | | | | |
| 55A | துவரை | 0 | 0 | | | | |

# வேளாண்மை அறிவியல் நிலையம் வம்பனில் 16வது அறிவியல் ஆலோசனைக் குழுக்கூட்டம்



புதுக்கோட்டை, பிப்.25

வேளாண்மை அறிவியல் நிலையம் வம்பனில் 16வது அறிவியல் ஆலோசனைக் குழு கூட்டம் நடைபெற்றது. இதில் தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தின் விரிவாக்க கல்வி இயக்குனர் முனைவர்.பி.பொ.முருகன் தலைமை ஏற்று நடத்தினார் மற்றும் முனைவர் பாஸ்கரன் முதன்மை விஞ்ஞானி (10வது மண்டலம்) இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கழகம் ஹைதராபாத் சிறப்புரையாற்றினார். வேளாண்மை அறிவியல் நிலைய திட்ட ஒருங்கிணைப்பாளர் முனைவர் ஆ.யுவராஜா இந்நிகழ்சியை ஒருங்கிணைத்து வரவேற்புரை ஆற்றினார். மேலும் கடந்த ஆண்டு பரிந்துரைகளுக்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகளை விரிவாக எடுத்துரைத்தார்.

இக்கூட்டத்தில் புதுக்கோட்டை மாவட்டத்திற்கான திட்டங்கள், வேளாண்மைக்கான புதிய தொழில்நுட்பங்கள், இரகங்கள் ஆகியவற்றை பற்றி ஆலோசிக்கப்பட்டது. ச.ஜெயபாலன் துணை இயக்குனர் ஸ்டாமின், குடுமியான்மலை வேளாண்மை துறை திட்டங்களை பற்றிக் கூறினார். முனைவர் ஜெகன் மோகன், முதல்வர், NIFTEM, தஞ்சாவூர் உணவு மதிப்புக் கூட்டல் திட்டங்களை பற்றிய உரையாற்றினார்.

புதுக்கோட்டை மாவட்டத்தின் பல்வேறு துறைகளை சேர்ந்த மாவட்டத்தின் தலைமை அலுவலர்கள் மற்றும் ஆலோசனைக் குழு உறுப்பினர்கள் இந்தக் கூட்டத்தில் பங்கேற்று தங்களின் மேலான கருத்துக்களையும் ஆலோசனைகளையும் வழங் கினர். இவ்விழாவின் நிறைவாக நிலையத்தின் விஞ்ஞானி முனைவர் ம.தமிழ்செல்வன் நன்றியுரை வழங்கினார். இந்நிகழ்ச்சியை வேளாண்மை அறிவியல் நிலையத்தின் அனைத்து விஞ்ஞானிகள் மற்றும் அலுவலர்கள் ஏற்பாடு செய்திருந்தனர்.

**மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!**


100% LEAD FREE PIPE
Rithvik Pipe
25 YEARS WARRANTY
PVC PIPES | PLUMBING PIPES | UPVC PIPES | CONDUIT PIPES | BOREWELL PIPES
WATER TANKS
இந்தியாவின்
தலைச்சிறந்த ISI PVC PIPE
இந்த QR CODE - ஐ SCAN செய்து உங்களது PVC PIPE TEST REPORT SAMPLE - ஐ பெற்றுக்கொள்ளுங்கள்
Rithvik Pipe 63mm 0.4 MPa Class-2 (4.0Kg/cm
ஈடில்லா பலம்
குறைவில்லா தரம்
மேலும் விவரங்களுக்கு
9645877721

# விவசாயிகளுக்கான இரண்டு நாள் ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு பயிற்சி முகாம்




திருச்சி, பிப்.25

மத்திய ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு மையம், திருச்சி சார்பில் ஈரோடு மாவட்டம், கொடுமுடி வட்டாரத்திலுள்ள வேளாண் மற்றும் உழவர் நலத்துறை அலுவலகத்தில் தமிழ்நாடு வேளாண் மற்றும் உழவர் நலத்துறை இணைந்து விவசாயிகளுக்கான இரண்டு நாள் ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு முறைகள் பற்றிய விழிப்புணர்வு பயிற்சி முகாம் பிப்ரவரி 24 மற்றும் 25ஆம் தேதிகளில் நடைபெற்றது.

இப்பயிற்சி முகாமில், மத்திய ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு மையத்தின் துணை இயக்குனர் முனைவர் ச.சிவராம கிருஷ்ணன் இரண்டு நாள் பயிற்சியை பற்றிய தொடக்க உரையாற்றினார். மேலும், ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு பற்றிய வழிமுறைகளை விவசாயிகளுக்கு எடுத்துரைத்தார். அதனை தொடர்ந்து கொடுமுடி வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் (பொறுப்பு ) ரேகா. மற்றும் தோட்டக்கலை உதவி இயக்குனர் முத்துக்குமார், இப்பயிற்சியில் கலந்து கொண்டு இப்பயிற்சியை பற்றி சிறப்புரையாற்றினார்கள்.

மேலும், மத்திய ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு மையத்தின் பயிர் பாதுகாப்பு அலுவலர் முனைவர் இரா.கோவிந்தராஜ், தென்னை, வாழை மற்றும் காய்கறி பயிர்களில் ஒருங்கிணைந்த பூச்சி/நோய் மேலாண்மை பற்றி விளக்க உரையாற்றினார்.

இப்பயிற்சியில் மத்திய ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு மையத்தின் உதவி பயிர் பாதுகாப்பு அலுவலர் எம்.அமுதா, விவசாயிகளுக்கு விதை நேர்த்தியின் முக்கியத்துவம் மற்றும் ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பில் பல்வேறு பொறிகளின் பயன்பாடு, வயல் சூழல் ஆய்வின் முக்கியத்துவம், நன்மை மற்றும் தீமை செய்யும் பூச்சிகளை இனம் கண்டறிதல் பற்றி

விரிவாக செயல் விளக்கம் அளித்தார். பயிர் பாதுகாப்பு அலுவலர் முனைவர் இரா.கோவிந்தராஜ். உயிரியல் முறையில் பூச்சிகள் மற்றும் நோய்களை கட்டுப்படுத்தும் முறைகள் பற்றி விரிவாக விளக்கம் அளித்தார். இம்மையத்தின் பயிர் பாதுகாப்பு தொழில்நுட்ப உதவியாளர் ஜெ.ஜெயகாந்தன் ரசாயண பூச்சிக் கொல்லிகளால் ஏற்படும் பாதிப்புகள் மற்றும் பாதுகாப்பான முறையில் இரசாயண பூச்சிக்கொல்லிகளை பயன்படுத்துவது பற்றி செயல் முறை விளக்கம் அளித்தார். மேலும் இம் மையத்தின் உதவி பயிர் பாதுகாப்பு அலுவலர் எம்.அமுதா, தாவரம் மற்றும் வேம்பு சார்ந்த பூச்சி விரட்டிகள் தயாரிக்கும் முறைகளை பற்றி செயல் விளக்கம் அளித்தார். இப்பயிற்சியின் முடிவில் உதவி பயிர் பாதுகாப்பு அலுவலர் எம்.அமுதா நன்றியுரை ஆற்றினார். இப்பயிற்சியில் கொடுமுடி வட்டாரத்தை சேர்ந்த 55 விவசாயிகள் பங்கு பெற்று பயனடைந்தனர்.

## மண்புழு உரம் தயாரிப்புக் கூடம் பார்வையிடல் குறித்த உள்மாவட்ட விவசாயிகள் கண்டுணர்வு பயணம்



மதுரை, பிப்.25

மதுரை மாவட்டம், கள்ளிக்குடி வட்டார வேளாண்மைத் துறையின் வேளாண்மைத் தொழில்நுட்ப மேலாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை திட்டத்தின் கீழ் மண்புழு உரம் தயாரிப்புக் கூடம் பார்வையிடல் குறித்த உள்மாவட்ட விவசாயிகள் கண்டுணர்வு பயணத்திற்கு வாடிப்பட்டியில் அமைந்துள்ள எஸ்.எஸ் மண்புழு உரத்தொழிற்சாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். இதில் விவசாயிகளுக்கு மண்புழு உரம் பயன்பாடு பற்றியும், மண்புழு உரத்தில் அடங்கியுள்ள சத்துக்கள் பற்றியும், அதனை தயார் செய்யும் முறைகளையும், அதனை நிலத்தில் எவ்வாறு இடுதல் பற்றியும் அந்நிறுவன உரிமையாளர் சுரேஷ் தெளிவாக விவசாயிகளிடம் விளக்கினார். விவசாயிகள் மண்புழு உரம் தயாரிப்பு செய்முறைகளை நேரடியாக பார்வையிட்டனர். கள்ளிக்குடி வட்டாரத்தைச் சேர்ந்த 50 விவசாயிகள் இப்பயணத்தில் கலந்து கொண்டனர். பயணத்திற்கான ஏற்பாடுகளை கள்ளிக்குடி வட்டார அட்மா திட்ட அலுவலர்கள் மேற்கொண்டனர்.

# அட்மா திட்டத்தில் தரமான விதை தேர்வு குறித்த பயிற்சி

அரியலூர், பிப்.25

அரியலூர் மாவட்டம் தா.பழூர் வட்டாரத்தில் வேளாண்மைத் துறையின் கீழ் செயல்படும் வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமைத் திட்டத்தின்கீழ் சுத்தமல்லி கிராமத்தில் தரமான விதைத்தேர்வு குறித்து 24.2.25 அன்று விவசாயி களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது.

இப்பயிற்சியில் வேளாண்மை உதவி இயக்குநர் ரவி தலைமையேற்று தொழில்நுட்ப உரையாற்றி பேசுகையில் விதைகளின் முக்கியத்துவம்,விதை உற்பத்தி, விதை சான்றுத் துறை வல்லுநர் விதை, ஆதார விதை மற்றும் சான்று விதை ஆகியன பற்றி தெளிவாக எடுத்துக்கூறினார். கிரீடு வேளாண் அறிவியல் மையத்தின் பேராசிரியர் மற்றும் தலைவர் அழகுக்கண்ணன் பேசுகையில் நெல், பயறு வகைகள், எண்ணெய்வித்துக்கள் மற்றும் கரும்பு பயிர்களில் செய்–யக்கூடிய பல்வேறு விதமான விதைநேர்த்தி முறைகள், விதைக்கடினப்படுத்துதல் குறித்து கூறுகையில் கார்பன்டிசம் கொண்டு ரசாயன முறையிலும், உயிர் உரங்கள் மற்றும் உயிர் பூஞ்சான கொல்லிகள் கொண்டு இயற்கை முறையிலும், 2 சத உப்பு கரைசல், கியுமிக் ஆசிட் மற்றும் பொட்டாசியம் குளோரைடு மூலம் விதை நேர்த்தி செய்யும் முறைகள் மற்றும் அதன் பயன்கள் குறித்தும் விளக்கினார். வேளாண்மை அலுவலர் தமிழ்மணி விவசாயிகள் அனைவரும் தங்களுடைய நில உடைமை பதிவேடுகளை வேளாண்மைத்துறை மற்றும் சகோதரத்துறையின் மூலம் நடைப்பெற்று வரும் முகாம்களில் கலந்து கொண்டு தங்களது நில விவரங்களை பதிந்து இனிவரும் காலங்களில் அரசின் நலத்திட்டங்களை பெற்றிட விவசாய பதிவு முக்கியம் எனக் கூறினார். இப்பயிற்சிக்கான ஏற்பாடுகளை அட்மா திட்ட வட்டா தொழில்நுட்ப மேலாளர் சகாதேவன், உதவி தொழில்நுட்ப மேலாளர்கள் லெட்சுமி ஆகியோர் ஏற்பாடுகளை செய்திருந்தனர்.

இப்பயிற்சியில் சுத்தமல்லி கிராமத்தை சேர்ந்த 40க்கும் மேற்பட்ட விவசாய பெருமக்கள் கலந்துக் கொண்டு பயன் பெற்றனர்.


இப்பொழுது தென்னிந்தியாவின்
பிரபலமான வாழை இரகங்களின்
கன்றுகள் அதிநவீன திசுவளர்ப்பு
தொழில்நுட்பத்தில் உங்களுக்காக
உருவாக்கி தருகிறது ஜெயின் நிறுவனம்
ஜெயின் ஏலக்கி:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் செவ்வாழை:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் பூவன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 16/-
ஜெயின் மொந்தன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் நேந்திரன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 18/-
முன்பதிவு தொடர்புக்கு :
94425 02396
94422 03387
94425 04480
Jain Tissue-Culture
Better Yield - Greater Profits.
JAIN
Jain Irrigation Systems Ltd.
Small Ideas. Big Revolutions.
JAIN HI-TECH PLANT FACTORY
Better Yield - Greater Profits.
போக்குவரத்து கட்டணம் கூடுதலாக. (உடுமலையிலிருந்து)
ஏமாற்றத்தைத் தவிர்க்க, உங்கள் தேவைகளை இன்றே முன்பதிவு செய்யுங்கள்.
குறிப்பு: ஜெயின் திசு வளர்ப்பு தாவரங்கள் நோய்த் தாக்கம் இல்லாதவை என்ற போதிலும் நிலத்தில் ஊன்றிய பின்பு நோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது.
அதனால் நோய்த் தாக்கம் ஏற்படாது என்பதற்கோ, விளைச்சல் பாதிக்கப்படாது என்பதற்கோ நிறுவனம் உத்தரவாதம் அளிக்காது.

# வெற்றிகரமாக செயல்பட உழவர் உற்பத்தியாளர் நிறுவனத்தின் செயல்பாடு எப்படி இருக்க வேண்டும்? தெரியுமா?




கிராமப்புற விவசாயிகளை ஒருங்கிணைந்து அவர்கள் உற்பத்தி செய்த விளைப் பொருட்களுக்கு கட்டுபடியான விலை கிடைத்து உரிய வருமானம் கிடைப்பதை உறுதி செய்து விவசாயிகளின் பொருளாதார வலிமையை அதிகரிக்க உருவாக்கப்பட்ட அமைப்பு தான் 'உழவர் உற்பத்தியாளர் நிறுவனம் (FARMER PRODUCER ORGANISATION). இந்தியாவில் 10,000 உற்பத்தியாளர் நிறுவனம் (FPO) அமைத்திட இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதுவரை 9600 FPOக்கள் பதிவு செய்யப்பட்டு உள்ளது. அதில் 8600 விவசாயம் மற்றும் அதனை சார்ந்தவைகளாகும்.

**உழவர் உற்பத்தியாளர் நிறுவனம் எப்படி தொடங்குவது? யார் யார் உறுப்பினராக சேரலாம்?**

FPO நிறுவனத்தை மத்திய அரசின் கீழ் செயல்படும் நபார்டு வங்கியும் (NABARD BANK) மாநில அரசின் வேளாண் விற்பனை பிரிவு இதை செயல்பட உறுதுணையாக இருக்கிறது. விவசாயிகள் கூட்டாக இணைந்து உறுப்பினராகி, உற்பத்தி செய்த விளைப்பொருட்களை விற்பனை செய்யும் நோக்கில் தான் இந்த உழவர் உற்பத்தியாளர் நிறுவனம் தொடங்கியது. மேலே கண்ட நபார்டு மற்றும் மத்திய மாநில வேளாண் விற்பனை பிரிவுகள் கடனுதவி மானியங்கள் வழங்கி அவற்றை வெற்றிகரமாக செயல்பட உதவி செய்கிறது.

குறைந்த பட்சம் ஒரு ஏக்கர் நிலம் வைத்திருக்கும் விவசாயிகள் / விவசாயத்திற்கு உதவியாக செயல்படுகின்றவர்கள் மட்டுமே இதில் உறுப்பினராக சேர முடியும். ஒரு குழுவிற்கு 20 விவசாயிகள் விதம் 50 குழுக்கள் (GROUP) மூலமாக 1000 விவசாயிகள் அதிகபட்சமாக இணைந்து உருவாக்கலாம். அதனை கம்பெனி சட்டபடி 2013ஆம் ஆண்டு முதல் பதிவு செய்யப்பட்டு வருகிறது. பதிவு செய்யப்பட்ட REGISTERED FPOக்கு மட்டுமே அரசின் நிதி உதவியும் நபார்டு வங்கியின் கடனுதவி கிடைக்கும்.

**விவசாயிகள் ஏதேனும் தொகை கட்டணுமா?**

உறுப்பினராக இணைவதற்கு அவர்கள் பங்கு தொகையாக 1000 ரூபாய் (SHARE) செலுத்தி இணைய வேண்டும். நிகர வருமானத்தில் அவர்களின் பங்கு தொகைக்கேற்ப டிவிடண்டு (DIVIDEND) வழங்கப்படும். இதில் இன்னும் பல விதமான நெறிமுறைகளும் கட்டுபாடுகளும் உள்ளன. அவற்றை அந்தந்த உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களின் (BOARD OF DIRECTORS) முடிவு செய்து வழிகாட்டு நெறிமுறைகளை வகுக்கலாம். உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள் சிறப்பாக செயல்பட்டாலே, விவசாயிகளின் வாழ்க்கை நிச்சயமாக மேம்படுவதுடன், காந்தி கண்ட கிராம ராஜ்ஜியம் மிக விரைவில் மலரும். தமிழகத்தில் பல்வேறு மாவட்டங்களில் பலவேறு பயிர்கள் (பயறு, தென்னை) ஊர்கள் பெயரில் FPO உள்ளன.

**FPOக்கு அரசு மற்றும் நபார்டு நிதி எவ்வளவு தெரியுமா?**

1) FPOக்களை வழிநடத்துவதற்காக, தொடங்கப்படும் நாளில் இருந்து 5 ஆண்டுகளுக்கு CBBO எனப்படும் நிறுவனங் களுக்கு, 5 ஆண்டுகளுக்கு 25 லட்சம் வழங்கப்படுகிறது.

2) NATIONAL AGRICULTURE INFRA FINANCING FACILITIES மூலமாக 2 கோடி ரூபாய் வரை பிணையில்லாத 4% வட்டியுடன் கடனுதவி வழங்கப்படும்.

3) நபார்டு வங்கி உதவியுடன் திறன் மேம்பாட்டு பயிற்சி கள பயணம் வணிக பிளான் போடுதல் போன்றவற்றிற்கு ஊக்க தொகை வழங்குவதுடன், NABKISAN மூலமாக நிதி உதவி வழங்கப்படுகிறது.

4) விவசாயிகளின் வருமானத்தை இரட்டிப்பாக்குவதற்கான உத்தியாக 2018 மத்திய பட்ஜெட்டில் 5 ஆண்டுகளுக்கு வரி சலுகை உட்பட பல சலுகைகளை FPO வழங்கி உள்ளது. எண்ணற்ற உதவிகள் மற்றும் மானியங்கள் கிடைத்தாலும் சில FPOக்கள் தொடங்கிய வேகத்திலே இழுத்து மூடப்படுகின்றன.

**வெற்றிகரமாக செயல்பட என்ன செய்ய வேண்டும்.**

1) நிர்வாக சீர்கேடுகளை உடனடியாக களைய வேண்டும்.

2) அலட்சியம் தனிநபர் அதிகார போக்கு இல்லாமல் ஒரே குடும்ப உறுப்பினர்கள் (SHARE HOLDERS) போல அனைத்து உறுப்பினர்களும் செயல்பட வேண்டும்.

3) முறைகேடு போன்றவற்றிற்கு இடம் தரக்கூடாது.

4) விளைப்பொருட்களை மதிப்புக்கூட்டப்பட்ட பொருளாக மாற்றி விற்பனை செய்ய வழி வகை செய்ய வேண்டும்.

5) தங்களுடைய உறுப்பினர்களை, சந்தைக்கேற்ப பொருளை (MARKET BASED PRODUCTION) உற்பத்தி செய்ய எற்பாடு செய்ய வேண்டும்.

6) ஓவ்வொரு விவசாயியும் ஒரு வியாபாரியாக மாற்ற வேண்டும். அவர்களுக்கு சந்தை தொடர்பான தகவல்கள் (MARKET INTELLIGENCE) தெரியப்படுத்த வேண்டும்.

7) விவசாய விளைபொருட்களை இருப்பு வைத்து பொருளிட்டு கடன் வழங்கிடவேண்டும்.

8) விவசாயிகளுக்கு தேவையான அனைத்து இடுபொருட் களை (விதை உரம் பூச்சிமருந்து) போன்றவைகளை விற்பனை செய்ய ஏற்பாடு செய்ய வேண்டும்.




9) விவசாயிகளுக்கு ஒருங்கிணைந்த பண்ணை முறை சாகுபடி செய்ய அறிவுறுத்த வேண்டும்.

10) ஆண்டுக்கு இருமுறை அனைத்து உறுப்பினர்களை வரவழைத்து செயல்பாடுகளை தெரியப்படுத்த வேண்டும். சுருங்க கூறின் FPO செயல்பாடுகள் அதனுடைய CEO, தலைமை செயல் அலுவலரின் செயல்பாடுகளை பொறுத்தே அமையும். அந்த நிறுவனத்தின் முன்னத்தி ஏர் போன்று செயல்பட வேண்டும்.

இவ்வாறாக ஒளிவுமறைவற்ற நிர்வாகத்தை மேற்கொண்டால் எந்த ஒரு உழவர் உற்பத்தியாளர் நிறுவனமும் தோல்வி அடைய வாய்ப்பில்லை. மாறாக வெற்றிகரமாக செயல்பட்டு சிகரத்தை அடையும் அதற்கு ஓரே வழி குழு உறுப்பினர்களின் ஒற்றுமையும் அவர்களின் ஆர்வமும் தான்.

தகவல் : **அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.**


100% LEAD FREE PIPE
Rithvik Pipe
25 YEARS WARRANTY
PVC PIPES | PLUMBING PIPES | UPVC PIPES | CONDUIT PIPES | BOREWELL PIPES
WATER TANKS
இந்தியாவின்
தலைச்சிறந்த ISI PVC PIPE
இந்த QR CODE - ஐ SCAN செய்து உங்களது PVC PIPE TEST REPORT SAMPLE - ஐ பெற்றுக்கொள்ளுங்கள்
Rithvik Pipe 63mm 0.4 MPa Class-2 (4.0Kg/cm
ஈடில்லா பலம்
குறைவில்லா தரம்
மேலும் விவரங்களுக்கு
9645877721

# விதைப்பண்ணை அமைத்து எள் பயிரில் அதிகம் இலாபம் பெறலாம்

விழுப்புரம் மற்றும் கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் தற்போது விவசாயிகள் எள் பயிரில் விதைப்பண்ணை அமைப்பதன் மூலம் அதிக இலாபம் பெறலாம் என்று விதைச்சான்று மற்றும் உயிர்மச்சான்று உதவி இயக்குநர் முனைவர் க.பாலசுப்ரமணியன் தெரிவித்துள்ளார்.

விவசாயிகளுக்கு தேவையான எள் விதைகள் ஆதாரம் மற்றும் சான்றுநிலை TMV (Sv)7. VRI 3. VRI 4. TMV 4. ஆகிய ரகங்கள் விதைச்சான்று துறையால் சான்றளிக்கப் பட்டு வட்டார வேளாண்மை விரிவாக்க மையங்களில் இருப்பு வைக்கப் பட்டுள்ளது. விவசாயிகள் வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அலுவலர்களை அணுகி மானிய விலையில் சான்று பெற்ற விதைகளை வாங்கி விதைப்பண்ணை அமைக்கலாம்.

எள் ஏக்கருக்கு 2 கிலோ வீதம் வரிசைக்கு வரிசை 30 செ.மீ இடைவெளியும் செடிக்கு செடி 30 செ.மீ இடைவெளி விட்டு விதைத்து ஒரு சதுர மீட்டருக்கு 11 செடிகள் வீதம் பயிர் எண்ணிக்கை பராமரிக்க வேண்டும். விதைத்த 15 மற்றும் 35 நாட்களில் களை எடுத்தல் அவசியம். ஒரு ஏக்கருக்கு 20/10/10 கிலோ தழை. மணி. சாம்பல் சத்தினை அடியுரமாக அளிக்கவும். இதனுடன் 2 கிலோ மாங்கனீஸ் சல்பேட்டை சேர்த்து கொள்ளவும். தொழில்நுட்பங்களை தவறாமல் கடை பிடித்தல், சான்று பெற்ற விதைகளை பயன்படுத்துதல், சரியான பயிர் எண்ணிக்கையை பராமரித்தல், களைகள் மற்றும் கலவன்களை நீக்குதல், ஆகியவற்றை சரியான நேரத்தில் செய்வதன் மூலம் கூடுதல் மகசூல் பெறலாம்.

இவ்வாறு எள் பயிரில் விதைப்பண்ணை அமைத்து தரமான விதை உற்பத்தி செய்து வேளாண்மை மற்றும் உழவர் நலத் துறைக்கு வழங்கினால் உள்ளூர் சந்தை விலையுடன் ஊக்கத் தொகை மற்றும் உற்பத்தி மானியம் ஆகியவை சேர்த்து கூடுதல் இலாபம் பெறலாம். எனவே விதைப்பண்ணை அமைக்க விரும்பும் விவசாயிகள், விழுப்புரம் மற்றும் கள்ளக் குறிச்சி மாவட்டத்தில் உள்ள வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் மற்றும் உதவி விதை அலுவலரை அணுகி பயன் பெறலாம்.

# விவசாயிகளுக்கு மல்பெரி சாகுபடி நுட்பங்கள் சமீபத்திய பைவோல்டைன் பட்டுப்புழு வளர்ப்பு நுட்ப பயிற்சி



நாமக்கல், பிப்.25

நாமக்கல் மாவட்டம், எலச்சிபாளையம் வட்டாரம் வேளாண்மைத் துறையின் சார்பில் அட்மா திட்டத்தின் கீழ் எலச்சிபாளையம் ஒருங்கிணைந்த வேளாண் விரிவாக்க மையத்தில் மல்பெரி சாகுபடி நுட்பங்கள் சமீபத்திய பைவோல்டைன் பட்டுப்புழு வளர்ப்பு நுட்பங்கள் என்ற தலைப்பில் 40 விவசாயிகளுக்கு பயிற்சி நடைபெற்றது. இப்பயிற்சியில் வேளாண்மை உதவி இயக்குநர் ஜெயமாலா தலைமை வகித்து வேளாண்மைத் துறை சார்ந்த மத்திய மாநில திட்டங்கள், இடுப்பொருட்கள் இருப்பு விவரம் மற்றும் உயிர் உரங்கள், நுண்ணூட்டங்களின் பயன்பாடுகள் மற்றும் மானியத் திட்டங்கள், விவசாயிகளுக்கு தனி குறியீடு வழங்கும் முகாம் நடைபெறுதல் பற்றி கூறி விவசாயிகளின் சந்தேகங்களுக்கு விளக்கமளித்தார்.

இப்பயிற்சியில் இளைநிலை ஆய்வாளர் கௌசல்யா கலந்து கொண்டு பட்டு வளர்ப்புத் துறை சார்ந்த மானியத் திட்டங்கள் பற்றி விரிவாக விவசாயிகளுக்கு கூறி விளக்கமளித்தார்.

இப்பயிற்சியில் இறையமங்கலம் ஞானவேல் பட்டுப்புழு வளர்ப்பு முன்னோடி விவசாயி கலந்து கொண்டு விவசாயிகளுக்கு பட்டு புழு வளர்ப்பில் மல்பெரி சாகுபடி தொழில் நுட்பங்கள் பற்றி விரிவாக கூறினார். வட்டார தொழில்நுட்ப மேலாளர் திவாகர் அட்மா திட்ட செயல்பாடுகள் பற்றியும் மற்றும் உதவி தொழில்நுட்ப மேலாளர் வாசுகி உழவன் செயலி பதிவிறக்கம் மற்றும் பயன்பாடுகள் பற்றியும் கூறினர். இப்பயிற்சிக்கான ஏற்பாடுகளை அட்மா திட்ட அலுவலர்கள் ஏற்பாடு செய்திருந்தனர். மேலும் கிராமபுற அனுபவ பயிற்சிக்காக எலச்சிபாளையம் வட்டாரத்திற்கு வருகைப் புரிந்திருக்கும் ஊனறூஊண - வேளாண்மை கல்லூரி மாணவர்கள் 10 பேர் கலந்து கொண்டு விவசாயிகளுக்கு புதிய தொழில்நுட்பங்களை எடுத்துரைத்தனர்.

# நெல் கதிரடித்தல், உலர்த்தும் பணியை அறுவடை செய்த 24 மணி நேரத்திற்குள் செய்ய வேண்டும்

## விதைப்பரிசோதனை நிலைய அலுவலர்கள் விளக்கம்

திருப்பூர், பிப்.25

நெல் கதிரடித்தல் மற்றும் உலர்த்துதலை, அறுவடை செய்த 24 மணி நேரத்திற்குள் செய்ய வேண்டும் என திருப்பூர் மாவட்ட விதைப்பரிசோதனை நிலைய வேளாண்மை அலுவலர்கள் வளர்மதி மற்றும் கிருஷ்ணப்பிரியா கூட்டாக தெரிவித்துள்ளனர்.

இது பற்றி அவர்கள் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது, திருப்பூர் மாவட்டத்தில் நெல் சாகுபடியானது குறுவை மற்றும் சம்பா தற்சமயம் திருப்பூர் மாவட்டத்தில் சம்பா பருவத்தில் சாகுபடி செய்யப்பட்ட நெற்பயிர்கள் அறுவடைக்குத் தயார் நிலையில் உள்ளன. இச்சமயத்தில் மகசூல் இழப்பு இல்லாமலும், நெல் மணிகள் தரமானதாகவும் இருக்க அறுவடையின் போது சில உத்திகளை விவசாயிகள் கடைபிடிக்கலாம். நெல், அறுவடைக்கு தயார் என்பதனை நெல்மணிகள் மஞ்சள் நிறமாக (80.85 சதவீதம்) மாறுவதை வைத்து, விவசாயிகள் அறிந்து கொள்ளலாம். அந்த சமயத்தில் அறுவடை செய்வது சிறந்ததாகும்.

அறுவடையின் போது நெல்மணிகளின் ஈரப்பதம் 20 முதல் 25 சதவீதத்திற்குள் (ஈரப்பத அடிப்படையில்) இருக்க வேண்டும். இந்த ஈரப்பதத்தில் நெல் உடையாமல் உறுதியாக இருக்க வேண்டும். ஆனால் சேமிப்பின்போது, ஈரப்பதம் அதிகமாக இருந்தால், தானியத்தின் தரத்தைக் குறைப்பதுடன், அதிக இழப்பிற்கு வழிவகுக்கும், மேலும் விதையின் முளைப்புத் திறனும் குறைய வாய்ப்புள்ளது. ஆகவே 8 முதல் 12 மாதம் வரை சேமித்து வைக்க, ஈரப்பதம் 13 சதவீதத்திற்கு குறைவாக இருக்க வேண்டும். பயிரின் மேற்பரப்பு ஈரப்பதம் அதிகமாக இருந்தால் (முந்தைய மழை அல்லது அதிகாலையில்) மேற்பரப்பு ஈரப்பதம் காய்ந்து போதும்வரை காத்திருப்பது நல்லது. கதிரடித்தல் மற்றும் உலர்த்துதல் அறுவடை செய்த 24 மணி நேரத்திற்குள் செய்ய வேண்டும்.

**மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!**

திருப்பூர் மாவட்ட விதைப்பரிசோதனை நிலையமானது எண். 328/1, முதல் தளம், திருநகர் காலனி, திருச்சி ரோடு, பல்லடம், திருப்பூர்-664 என்ற முகவரியில் செயல்பட்டு வருகின்றது.

இந்த பரிசோதனை நிலையத்தில் விவசாயிகள், விற்பனை யாளர்கள் மற்றும் உற்பத்தியாளர்களிடமிருந்து பெறப்படும் பணி விதை மாதிரிகள் பரிசோதனை செய்யப்படுகின்றது. இந்த நிலையத்தில் விதையின் தரம் அறிய நிர்ணய காரணிகளான முளைப்புத்திறன், புறத்துய்மை, ஈரப்பதம் மற்றும் பிறரககலப்பு ஆகியவை ஆய்வு செய்யப்படுகின்றன. பணி விதை மாதிரிகள் கட்டணமாக ரூ.80/-செலுத்தி ஆய்வு முடிவுகளை பெறலாம். எனவே விதையின் தன்மை அறிந்து விதைப்பு செய்து அதிக மகசூல் பெற்று பயன்பெறலாம். இவ்வாறு அவர்கள் செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளனர்.

# உற்பத்தியாளர் சங்க செயல்பாட்டை அறிந்த வேளாண் கல்லூரி மாணவிகள்




நாமக்கல், பிப்.25

நாமக்கல் மாவட்டம், ராசிபுரம் வட்டராத்தில் பிஜிபி வேளாண்மை அறிவியல் கல்லூரி மாணவிகளின் மூன்று மாத காலம் அனுபவ பயிற்சியில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் நிலையில், அனுபவப் பயிற்சியின் பாகமாக உற்பத்தியாளர் சங்கத்தை காணச் சென்றனர். அங்கு வெண்பா உற்பத்தியாளர்கள் சங்கத்தின் செயலாளர் சக்திவேலை சந்தித்து சங்கத்தின் செயல்பாடுகளை மாணவிகள் அறிந்தனர். மேலும், இச்சங்கம் தமிழ்நாடு சங்க சட்டப்படி 1987 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. இதின் முக்கிய அம்சங்கள் கிராமப்புறம் மேம்பாட்டு திட்டம் ,பெண்கள் சுய வேலைவாய்ப்பு , உணவு பாதுகாப்பு மற்றும் தொழிற்பயிற்சி ஆகும். சங்கத்தின் முக்கிய நோக்கம் வளர்ச்சி மேம்பாட்டு திட்டம் மற்றும் பொருளாதார ஊக்குவித்தல் ஆகும். சங்கத்தில் முதன்மையாக செய்யப்படும் பணிகள் மக்கும் கோப்பை தயாரிப்பு, காளான் வளர்ப்பு , வேளாண் பொருட்கள் கொள்முதல், தேனிப்பெட்டி அமைத்தல், தேனி வளர்ப்பு, நெய் உற்பத்தி தேங்காய் கொள்முதல் ஆகும். இதைப் பற்றி எல்லாம் மாணவிகள் தெளிவாக கற்றுக் கொண்டனர். கடைசியாக செயலாளரிடம் புகைப்படம் எடுத்துக் கொண்டனர்.

# கரிசல் மண் நிலத்தில் நீர் மேலாண்மை உத்திகள்

கரிசல் மண்ணில் களிப்பகுதியானது மற்ற மண் வகைகளைக் காட்டிலும் அதிகமாக உள்ளது. சுண்ணாம்பு சத்தும் இம்மண்ணில் உள்ளது. சுமாரான ஈரநிலையில் மிகவும் பிசுபிசுப்பும் ஒட்டுத்தன்மையும் உள்ளது. கோடையில் அதிகமாக வெடிப்பு ஏற்பட்டு தன்னைத்தானே உழுது கொள்ளும் அல்லது பிரட்டிக் கொள்ளும் தன்மையும் உடையது. களியின் அளவு அதிகமாக இருப்பதால் நீர் பிடிப்புத்திறன் அதிகம். ஆனால் நீர் கடத்தும் திறனும் நீர் கசிவும் மிகக்குறைவாகும்.

நீர் கசிவு குறைவாக இருப்பதால் நெல் பயிருக்கு சிக்கன நீர் நிர்வாகம் செய்ய ஏதுவாகும். மற்ற பயிர்களான சோளம், கம்பு, பருத்தி, கடலை, மிளகாய் போன்ற பயிர்களுக்கு தொடர்ச்சியாக அடைமழை பெய்தால் வடிகால் வசதி செய்யும்போது காற்றோட்ட வசதி வேர் மண்டலத்தில் அதிகரித்து நல்ல ஊட்டச்சத்து கிடைத்து உற்பத்தித்திறன் குறையாமலிருக்கும்.

இம்மண்ணில் கரையும் உப்புகள் அதிகமாக இருப்பின் நெல் சாகுபடி செய்தால் உவர்களர் நிலமாக மாறிவிடும். இக்கரிசல் மண்ணுடன் ஏக்கருக்கு 20 வண்டி மணல் அல்லது செம்மண் கலந்து உழுதால் மண்ணின் நீர் கடத்தல், நீர் ஊடுருவுதல் ஆகியவை மேம்பட்டு நல்ல பலன் கிடைக்கும்.

கரிசல் மண்ணுள்ள நிலத்தில் 20 மீட்டருக்கு ஒரு வடிகால் வாய்க்கால் 60 செ.மீ ஆழம் வெட்டி கழிவு நீரை அவ்வப்போது வெளியேற்றினால் பயிர்களுக்கு நல்ல பலன் தரும்.

கரிசல் மண்ணுக்கு உப்புள்ள கிணற்று நீரை பாய்ச்சக்கூடாது. நெல் அறுவடைக்குப்பிறகு உடனடியாக நிலம் தயாரிக்க முடியாது. குறிப்பிட்ட ஈரம் உள்ள பொழுது தான் உழவு செய்ய முடியும்.

கோடை உழவு செய்வதால் மழை நீரையும் மண்ணில் உள்ள ஈரத்தையும் வீணாக்காமல் சேர்த்து வைக்கலாம். நெல் சாகுபடிக்கு நிலம் தயாரிக்க நீர்த் தேவையும் குறைகிறது. மண்கண்டம் ஆழமாக இருந்தால் பழமரங்களை வளர்க்கலாம். சொட்டு நீர், தெளிப்பு நீர் பாசனத்தை கையாண்டால் நீரை சிக்கனமாக உபயோகப்படுத்தலாம். நீர்பிடிப்புத்திறன் அதிகமாக உள்ளதால் நீண்ட நாட்கள் இடைவெளியிட்டு நீர் பாய்ச்சலாம்.

பொதுவாக கரிசல் மண்ணில் நீர் ஊடுருவி பாயும் தன்மையை மேம்படுத்த மணல் சேர்த்து உழ வேண் டும். வடிகால் வசதியை ஏற்படுத்தி நீண்ட நாட்கள் இடைவெளியில் நீர் பாசனம் செய்து பயிர் விளைச்சலை பெருக்கலாம் என்று சேலம் மாவட்டம், வீரபாண்டி வேளாண்மை உதவி இயக்குநர் பா.கார்த்திகாயினி கேட்டுக்கொண்டுள்ளார்.




## ஒருங்கிணைந்த வேளாண்மை விரிவாக்க மையத்தில் மாணவிகள் பயிற்சி



நாமக்கல், பிப்.25

நாமக்கல் மாவட்டம், வசந்தபுரத்தில் உள்ள ஒருங்கிணைந்த வேளாண்மை விரிவாக்க மையத்தில் பிஜிபி வேளாண்மை கல்லூரி மாணவிகள் பயிற்சி பெற்றனர். விவசாய அதிகாரி மோகன் மாணவிகளுக்கு வேளாண்மை தகவல்களை எடுத்துரைத்தார்.

வேளாண் துறைகள் மற்றும் தற்போது உள்ள அதிகாரிகளின் பணிகள் பற்றியும், படிநிலைகளை பற்றியும், மேலும் நில உபயோகத்தின் ஒன்பது மடங்கு வகைப்பாடுகள், நாமக்கல் மாவட்டத்தில் உள்ள வட்டங்கள், வட்டங்கள் உள்ளடக்கிய கிராமங்கள் பற்றியும், நாமக்கல் மாவட்டத்தில் பயிரிடப்படும் பயிர்கள், உற்பத்தி, உற்பத்தித்திறன், ATMA திட்டம், மாநில மற்றும் மத்திய திட்டங்கள், பற்றியும் விரிவாக கூறினார். பொதுபயிர் மதிப்பீட்டு ஆய்வு, உணவு தானிய இயக்கம், நீட்டிப்பு சீர்திருத்தங்களுக்கான மாநில விரிவாக்க திட்டங்களுக்கு ஆதரவு (SSEPERS) ஆகியவற்றை மாணவிகளுக்கு எடுத்துரைத்தார்.

# உயிர் உரங்கள் உற்பத்தி மையத்தினை பார்வையிட்ட வேளாண் கல்லூரி மாணவர்கள்



இராமநாதபுரம், பிப்.25

நம்மாழ்வார் வேளாண் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரி இறுதி ஆண்டு மாணவர்கள் ஊரக வேளாண் அனுபவ பயிற்சி ( RAWE ) மூலம் கிராமங்களில் தங்கி விவசாயி மக்களிடம் தங்களின் பயிர் சாகுபடி முறை பற்றியும் அவர்கள் விவசாயத்தில் ஏற்படும் இன்னல்கள் பற்றி அறிந்து கொள்கின்றனர். இந்நிலையில், வேளாண் மாணவர்கள் இராமநாதபுரத்தில் அமைந்துள்ள உயிர் உரங்கள் உற்பத்தி மையத்திற்கு சென்று அங்கு உற்பத்தி செய்யப் படும் உயிர் உரங்களான பாஸ்போ பாக்டீரியா, அசோஸ்பைரில்லம், ரைசோபியம் ஆகியவற்றின் உற்பத்தி முறை பற்றியும் பல்வேறு மாவட்டங்களுக்கு அரசு விநியோகம் பற்றி அறிந்து கொண்டார். இதன் உற்பத்தி, விநியோகம், மற்றும் அவற்றின் விவசாய பயன்பாட்டை பரத், உயிர் உரங்களை உற்பத்தி மைய அலுவலர் மாணவர்கள் விளக்கினார்.

# அரசு சாரா தொண்டு நிறுவனத்தை பார்வையிட்ட வேளாண் கல்லூரி மாணவிகள்

நாமக்கல், பிப்.25

நாமக்கல் மாவட்டம், மோகனூரில் உள்ள ஹெல்ட்ஸ் அரசு சாரா தொண்டு நிறுவனத்திற்கு பி ஜி பி வேளாண்மை கல்லூரி மாணவிகள் பார்வையிட்டனர். அங்கு அமைப்பின் முக்கிய செயற் பாட்டுகள், அமைப்பின் சாதனைகள் பற்றி தலைமைச் செயலர் சதீஷ் பாபு மாணவிகளுக்கு விளக்கினார் . மேலும் தங்களின் அமைப்பில் உற்பத்தி செய்யும் உயிர் உரம் பற்றி விளக்கினார் மற்றும் அங்கு நடைபெறும் அன்றாட செயல்பாடுகள் பற்றி விளக்கினார். அங்கு விவசாயிகளிடம் இருந்து கொள்முதல் செய்து அதை மதிப்பு கூட்டப்பட்ட தயாரிப்பு மேற்கொள்வதாக தெரிவித் தார். உழவர் உற்பத்தியாளர் அமைப்பாக இருக்கிறது. மேலும் விவசாயிகளுக்கு பல வழிகளில் உதவி கரங்களை நீட்டுகிறது.

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**

# தரமான விதை உற்பத்தி குறித்த விவசாயிகள் பயிற்சி

அரியலூர், பிப்.25

அரியலூர் மாவட்டம், ஜெயங்கொண்டம் வட்டார வேளாண்மைத் துறையின் மூலம் செயல்படுத்தப்பட்டு வரும் மாநில விரிவாக்கத் திட்டங்களுக்கான உறுதுணை சீரமைப்புத் திட்டத்தின் கீழ் (அட்மா) தரமான விதை உற்பத்தி குறித்த மாவட்ட அளவிலான விவசாயிகள் பயிற்சி வானதிரையன்பட்டினம் கிராமத்தில் நடைபெற்றது. அரியலூர் மாவட்ட வேளாண்மை துணை இயக்குநர் கணேசன் தலைமை வகித்தார். அவர் விவசாயிகளுக்கு அரசு செயல்படுத்தி வரும் மத்திய மாநில வேளாண் திட்டங்கள் குறித்தும், தரமான விதை உற்பத்தி தொழில் நுட்பங்கள் குறித்தும் விவசாயிகள் அரசின் வேளாண் திட்டங்களைப் பெற்று பயனடைய தங்களது அடையாள எண்ணைப் பெற பதிவு செய்வதன் அவசியம் குறித்தும் விளக்கினார்.

வட்டார வேளாண் உதவி இயக்குநர் சுப்ரமணியன் முன்னிலை வகித்தார். கிரீடு வேளாண் அறிவியல் மைய தொழில்நுட்ப வல்லுநர் திருமலைவாசன் கலந்து கொண்டு விவசாயிகளுக்குப் பயிற்சியளித்தார். தரமான நெல் விதை உற்பத்தியில் கடைபிடிக்க வேண்டிய ஒரு கிலோ விதைக்கு 10 கிராம் சூடோமோனாஸ் கொண்டு விதை நேர்த்தி செய்தல், உயிர் உரங்கள், நுண்சத்து பயன்படுத்துதல், ஏக்கருக்கு 10 கிலோ துத்தநாக சல்பேட் இடுதல் ஆகிய தொழில் நுட்பங்களை விளக்கினார். நிலக்கடலை விதை உற்பத்தியில் வேரழுகல் நோயைக் கட்டுப்படுத்த ஒரு கிலோ விதைக்கு 4 கிராம் டிரைக்கோடெர்மா விரிடி கொண்டு விதை நேர்த்தி செய்வது குறித்தும் தரமான மணிகளைப் பெற ஏக்கருக்கு 80 கிலோ ஜிப்சத்தை அடியுரமாகவும் 80 கிலோ ஜிப்சத்தை இரண்டாவது களையெடுப்பின்போது மேலுரமாகவும் இட்டு மண் அணைக்க வேண்டும் எனவும் விளக்கினார்.

மேலும் பூக்கள் உதிர்வதைத் தடுத்து மகசூலை அதிகரிக்க பூக்கும் பருவத்தில் ஏக்கருக்கு 2 கிலோ நிலக்கடலை ரிச் எனும் வளர்ச்சி ஊக்கியை 200 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கவேண்டும் எனவும் விளக்கினார்.

உளுந்து விதைப்பண்ணை அமைக்கும் போது ஒரு கிலோ விதைக்கு 4 கிராம் டிரைக்கோடெர்மா விரிடி கொண்டு விதை நேர்த்தி செய்வது குறித்தும் பூக்கள் உதிர்வதைத் தடுத்து காய்பிடிப்பினை அதிகரித்து கூடுதல் மகசூல் பெற பூக்கும் பருவத்தில் ஏக்கருக்கு 2 கிலோ பயறு ஒண்டர் எனும் வளர்ச்சி ஊக்கியை 200 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்க வேண்டும் எனவும் மஞ்சள் தேமல் நோய் கட்டுப்பாட்டு முறைகள் குறித்தும் விளக்கினார். மேலும் உயிர் உரங்கள், திரவ உயிர் உரங்கள், நுண்சத்து இடுதலின் அவசியம் குறித்தும் விளக்கி விவசாயிகளின் சந்தேகங்களுக்கு பதிலளித்தார்.

உதவி விதை அலுவலர் கொளஞ்சி விதைப்பண்ணை பதிவு செய்தல், வயலாய்வு, விதை கொள்முதல் ஆகிய விதை உற்பத்தி செயல்பாடுகளை விளக்கி விதைப்பண்ணை அமைக்க விரும்பும் விவசாயிகள் வட்டார வேளாண் உதவி இயக்குநர் அலுவலகத்தை அணுகலாம் எனத் தெரிவித்தார்.




வட்டாரத் தொழில் நுட்ப மேலாளர் மீனாட்சி அட்மா திட்ட செயல்பாடுகள் குறித்தும் மண் ஆய்வின்படி உரமிடுதலின் நன்மைகள் குறித்தும் விளக்கினார். விவசாயிகள் முருகன், செல்வம் ஆகியோர் விதைப்பண்ணை அமைத்து விதை உற்பத்தி செய்த தங்களது சாகுபடி அனுபவங்களை விவசாயிகளுடன் பகிர்ந்து கொண்டனர். பயிற்சிக்கான ஏற்பாடுகளை வட்டாரத் தொழில் நுட்ப மேலாளர் மீனாட்சி, உதவி தொழில்நுட்ப மேலாளர்கள் மகேஷ்குமார், ஆரோக்கியராஜ் மற்றும் நிலக்கடலை விதைப் பண்ணை அமைத்துள்ள விவசாயி முருகன் ஆகியோர் செய்திருந்தனர். வானதிரையன்பட்டினம் கிராம விவசாயிகளும் பண்ணை மகளிரும் பயிற்சியில் கலந்து கொண்டனர்.

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**

# ஒருங்கிணைந்த வேளாண்மை அமைப்பு பார்வையிட்ட வேளாண் கல்லூரி மாணவிகள்



நாமக்கல், பிப்.25

நாமக்கல் மாவட்டம் கார்கூடல்பட்டி கிராமத்தில் அசோக் குமார் என்பவர் ஒருங்கிணைந்த வேளாண் அமைப்பை செயல்படுத்தி வருகிறார். இதை பிஜிபி வேளாண் கல்லூரி மாணவிகள் பார்வையிட்டனர். ஒருங்கிணைந்த விவசாய முறை (IFS) என்பது நிலையான விவசாய முறைய-ாகும், இதில் பண்ணை வளங்களை அதிகபட்சமாக பயன்படுத்தி, விவசாயி களின் வருவாயை அதிகரிக்க பல்வேறு செயல்பாடுகள் ஒருங்கிணைக் கப்படுகின்றன. அதில் நாட்டு சர்க்கரை தயாரிப்பு, உயிர் உரம் உற்பத்தி, கால்நடை வளர்ப்பு, கோழி வளர்ப்பு, மன் முழு உரம் தயாரிப்பு, உயிர் வாயு உற்பத்தி, சூரிய உலர்த்தி, மற்றும் இயற்கை விவசாயம் போன்ற ஒருங்கிணைந்த செயல் பாடுகளை நடத்தி வருகிறார். மேலும் அவரது புதிய கண்டு பிடிப்பாக இழுவை இயந்திரத்தில் ஸ்பிரேயரை இனைத்து, இயந்திரத்தின் மோட்டார் மூலம் அதற்கு மின்சாரம் வழங்கப் படுகிறது. இதில், ஒரு நாளில் 1000 லிட்டர் நீர்உரம் தெளிக்க முடியும்.

இதன் குழாய் 100 மீட்டர் நீளம் கொண்டதால் அதிக பரப்பளவை குறைந்த நேரத்தில் கவர முடியும். இதன் மூலம் குறைந்த தொழிலாளர்களே தேவைப்படுகின்றனர்.

மற்றோரு முக்கிய அமைப்பாக அடை காக்கும் கருவியை மாணவிகள் பார்வையிட்டனர். இதில் முட்டைகளானது அடுக்கி வைக்கப்பட்டு தகுந்த வெப்பநிலையில் பராமரிக்கப்படுகிறது.

21 நாட்கள் கழித்து இந்த முட்டையிலிருந்து கோழிக் குஞ்சானது வெளி வருகிறது. இந்த கருவியை பயன்படுத்து வதன் மூலம் சீரான முட்டைப் பொரிக்கும் தன்மையைக் காணலாம்.

வளர்ந்த கோழி குஞ்சுகளை மற்றொரு கூண்டில் வளர்க்கப் படுகிறது.


இப்பொழுது தென்னிந்தியாவின்
பிரபலமான வாழை இரகங்களின்
கன்றுகள் அதிநவீன திசுவளர்ப்பு
தொழில்நுட்பத்தில் உங்களுக்காக
உருவாக்கி தருகிறது ஜெயின் நிறுவனம்
ஜெயின் ஏலக்கி:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் செவ்வாழை:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் பூவன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 16/-
ஜெயின் மொந்தன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் நேந்திரன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 18/-
முன்பதிவு தொடர்புக்கு :
94425 02396
94422 03387
94425 04480
Jain Tissue-Culture
JAIN
Jain Irrigation Systems Ltd.
Small Ideas. Big Revolutions.
JAIN HI-TECH PLANT FACTORY
Better Yield - Greater Profits.
போக்குவரத்து கட்டணம் கூடுதலாக. (உடுமலையிலிருந்து)
ஏமாற்றத்தைத் தவிர்க்க, உங்கள் தேவைகளை இன்றே முன்பதிவு செய்யுங்கள்.
குறிப்பு: ஜெயின் திசு வளர்ப்பு தாவரங்கள் நோய்த் தாக்கம் இல்லாதவை என்ற போதிலும் நிலத்தில் ஊன்றிய பின்பு நோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது.
அதனால் நோய்த் தாக்கம் ஏற்படாது என்பதற்கோ, விளைச்சல் பாதிக்கப்படாது என்பதற்கோ நிறுவனம் உத்தரவாதம் அளிக்காது.